ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2154/10 - 2019 දෙසැම්බර් මස 18 වැනි බදාදා - 2019.12.18

*2154/10 ஆம் இலக்கம் - 2019 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 18 ஆந் திகதி புதன்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி I : தொகுதி (I) - பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகார அமைச்சர் என்ற வகையில் எனக்கு உரித்தாக்கப்பட்டுள்ள அதிகாரத் தத்துவங்களையும் மற்றும் பொறுப்புப் பணிகளையும் குறித்த சட்டத்தின் பிரகாரம் கீழ்க்காணும் அட்டவணையில் குறிப்பீடு செய்யப்பட்டுள்ள, நிர்ணயிக்கப்பட்டுள்ள கருமங்களை நிறைவேற்றும் பொறுப்புக்களையும் அதற்கான அதிகாரத் தத்துவங்களையும் அரசியலமைப்பின் 44(5) ஆம் உறுப்புரையில் காணப்படும் ஏற்பாடுகளுக்கு இணங்க இளைஞர் விவகார இராஜாங்க அமைச்சர் துமிந்த திசாநாயக்க அவர்களுக்கு ஒப்படைக்கின்றேன் என்பதுடன், அமைச்சின் விடயப் பரப்பில் வருகின்ற சகல கருமங்கள் பற்றி ஆராய்ந்து பார்த்தல், தலையிடுதல் மற்றும் ஒருங்கிணைத்தல் முதலியனவும் இராஜாங்க அமைச்சருக்கு உண்டு எனவும் இத்தால் பிரகடனப்படுத்துகின்றேன்.

| *நிரல் I* | *நிரல் II* | *நிரல் III* |
|---|---|---|
| *கடமைகளும் பணிகளும்* | *திணைக்களங்களும், அரச கூட்டுத்தாபனங்களும் நியதிச் சட்ட நிறுவனங்களும்* | *நடைமுறைப்படுத்தப்பட வேண்டிய சட்டங்கள்* |
| 1. இளைஞர் சமுதாயத்தின் அபிலாசைகள் ஈடேற்றப்படுகின்றதான தேசிய நிகழ்ச்சித் திட்டமொன்றை நோக்காகக் கொண்ட மனப்பாங்கினை விருத்தியாக்குவதற்கான நிகழ்ச்சித்திட்டங்களை ஆக்குதல் மற்றும் நடைமுறைப்படுத்துதல் | 1. தேசிய இளைஞர் சேவைகள் மன்றம்<br>2. தேசிய இளைஞர் படையணி<br>3. தேசிய இளைஞர் விருது வழங்கல் அதிகார சபை | • தேசிய இளைஞர் சேவை பேரவைச் சட்டம் (1979 ஆம் ஆண்டின் 69 ஆம் இலக்க)<br>• இளைஞர் படையணி சட்டம் (2002 ஆம் ஆண்டின் 21 ஆம் இலக்க) |

| *நிரல் I* | *நிரல் II* | *நிரல் III* |
|---|---|---|
| *கடமைகளும் பணிகளும்* | *திணைக்களங்களும், அரச கூட்டுத்தாபனங்களும் நியதிச் சட்ட நிறுவனங்களும்* | *நடைமுறைப்படுத்தப்பட வேண்டிய சட்டங்கள்* |
| 2. இளைஞர் சமுதாயத்தை மையமாகக் கொண்டு சர்வதேச ஒத்துழைப்பு அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்களை நடைமுறைப்படுத்துதல் | 4. வரையறுக்கப்பட்ட தேசிய இளைஞர் சேவைகள் கூட்டுறவு நிறுவனம் | • சிறுவர், இளம் ஆட்கள் கட்டளைச் சட்டம் (1939 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்க) |
| 3. வேலைவாய்ப்பற்ற யுவதிகளை மையமாகக் கொண்ட அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்களை நடைமுறைப்படுத்துதல் | 5. தலைமைத்துவ அபிவிருத்திக்கான தேசிய நிலையம் | |
| 4. இளைஞர் அமைப்புகள் தொடர்பான ஒழுங்குறுத்தல் மற்றும் அபிவிருத்திப் பணிகள் | 6. ஸ்மார்ட் ஸ்ரீ லங்கா நிறுவனம் | |
| 5. வாலிபத்தின் திறன்கள், திறமைகள் மற்றும் படைப்பாற்றல் போன்றவற்றை சமூக அங்கீகாரம் ஏற்படும் வகையிலும் அவர்களுக்கு தங்களுடைய குறிக்கோள்களை முன்னேற்றிக்கொள்ளக் கூடிய வகையிலும் இளைஞர் சமுதாயத்தை இலக்கு வைத்த விசேட நிகழ்ச்சித் திட்டங்களை ஆக்குதல். | | |

டளஸ் அழகப்பெரும,
விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகார அமைச்சர்.

விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகார அமைச்சு,
இல. 9, பிலிப் குணவர்த்தன மாவத்தை,
கொழும்பு 07,
2019, திசெம்பர் 17.

01-128

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.